## தீபவடிவமாகவும், தங்க சொரூபமாகவும் இருக்கிற

# ''மகாலட்சுமி அருள் எல்லார் வீடுகளிலும் நிறையணும்'': லலிதா ஜூவல்லர்ஸ் நிறுவன அதிபர் கிரண்குமார் தீபாவளி வாழ்த்து

### கோடிக்கணக்கான நேயர்கள் கண்டுகளித்த 'யூடியூப்' விளம்பரப் படம்

சென்னை, நவ 6–

''தீபவடிவமாகவும், தங்க சொரூபமாகவும் இருக்கிற மகாலட்சுமியின் அருள் எல்லார் வீடுகளிலும் நிறையணும்...'', எல்லோருக்கும் ஹேப்பி தீபாவளி...' என்று தங்க, வைர நகை விற்பனையில் முன்வரிசையில் இருக்கும் பிரபல லலிதா ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் கிரண்குமார் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

'லலிதா ஜூவல்லர்ஸ்க்கு வாங்க... மகாலட்சுமியைக் கையோடு கூட்டிட்டுப் போங்க...' என்று அன்பு அழைப்பு விடுத்து, கிரண்குமார் எடுத்திருக்கும் விளம்பரப் படம் (60 நொடிகள்) 'யூடியூப்'பில் வெளியிடப்பட்டது. அது கோடிக்கணக்கான நேயர்களை கவர்ந்திழுத்திருக்கிறது.

'தீபத் திருநாள் வருகவே...' என்று மங்களகரமாக ஒலிக்கும் வசீகரக் குரலில் பாடல் ஒலிக்க, செவிகளை வருடும் தேனிசையில் விளம்பரப் படம் ஒடுகிறது.

பளபளக்கும் தங்கநகை – அலங்காரத்தோடு கையில் தீபம் ஏந்தி முன்னே நடக்கும் பச்சை – நீலநிற ஆடை மங்கை நடந்து செல்ல, புன்புலத்தில் பல்லக்கில் தூக்கி நடந்து வர தோளில் அலங்கரிக்கப்பட்ட உற்சவ மூர்த்திகள் திருவீதி திருஉலா வருவதைப் போல, பல்லக்கில் அலங்கரிக்கப்பட்ட மகாலட்சுமியின் உருவச் சிலை தங்க நகைகளோடு தங்கமாய் தகதகவென ஜொலிக்க அதைத் தோளில் சுமந்து வரும் கிரண்குமாரின் மெல்ல அடி எடுக்கும் நடையோடு தொடர்ந்து விளம்பரப் படம் ஒடுகிறது.

#### வேத விற்பன்னர்கள் புடைசூழ...

வேத விற்பன்னர்கள் புடைசூழ அமர்ந்திருக்க பக்தர்கள்



(பொதுமக்கள்) மண்டபம் முழுமையாய் நிறைந்திருக்க தூப–தீப மங்கள ஆரத்தியுடன் ரோஜா இதழ்களை அதிபர் தன் கைகளால் தூவும் அர்ச்சனை ஆராதனையும் தொடர்கிறது.

முடிவில் தங்கக் காசு அர்ச்சனையும் தொடர... இரு கரம் கூப்பி கண் மூடி தியானம். அது முடிந்து வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புன்னகை மலர, தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்களைச் சொல்கிறார் கிரண்குமார்.

பின்புலத்தில் 'லட்சுமி கடாட்ச தீபாவளி...' என்று வசீகரிக்கும் குரல் ஒலிக்கிறது.

தீபாவளி பண்டிகையின்போது தங்கம் வாங்குவது எல்லோராலும் விரும்பப்படுகிறது. இது ஒரு செழிப்பான மற்றும் மகிழ்ச்சியான ஆண்டுக்கான ஆசீர்வாதத்தைக் குறிக்கிறது.

தீபாவளிக்கான லலிதாவின் சமீபத்திய தொலைக்காட்சி விளம்பரம் இந்த உணர்வுகளை அழகாகப் படம் பிடித்துள்ளது.

#### லட்சுமி வழிபாடு

இதில் மக்கள் ஒன்று கூடுவதும், லட்சுமி தேவியை வழிபடுவதும், விளக்கு ஏற்றுவதும், பரிசுகளை பரிமாறுவதும் காட்டப்பட்டுள்ளது.

தீபாவளியின் உண்மையான கருத்து, மக்களிடையே பகிர்ந்து கொள்ளப்படும் அன்பு மற்றும் பக்தியில் உள்ளது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறது விளம்பரம்.

லலிதாவில் தங்கம் வாங்குவது என்பது நகைகளை வாங்குவது மட்டுமல்ல, பாரம்பரியத்தைத் தொடர்வதும், நேசத்துக்குரிய தமிப்புகளைப் பேணுவதும், தெய்வீக ஆசீர்வாதங்களைத் தழுவுவதும் ஆகும் என்பதையும் உணர்த்துகிறது.

#### சேதாரத்தில் 1% குறைப்பு

தீபாவளி கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக, லலிதா ஜூவல்லரி, அனைத்து தங்க நகைகளுக்கும் மார்க்கெட்டிலேயே குறைந்த தனது சேதாரத்தில் மேலும் 1% குறைத்துள்ளது.

எல்லா வைர நகைளுக்கும், தனது காரட் விலையில் ரூ.5 ஆயிரம் குறைத்துள்ளது என்பதும் அந்த விளம்பரம் மூலம் அறிவிக்கப்படுகிறது.

லலிதா ஜூவல்லர்ஸ் நிறுவனத்தின் பொன் எழுத்துக்கள் ஜொலிக்க, புஸ்வாணத்தின் வெளிச்சத்தில் மண்டபமே மின்ன, கிரண்குமார் இரு கரம் கூப்பி வாழ்த்துக்கள் சொல்வதோடு விளம்பரம் நிறைவடைகிறது. யூடியூப் தவிர தொலைக்காட்சிகளிலும் ஒடுகிறது இதே விளம்பரம்.

# எஸ்.ஆர்.எம். தேசிய ஊழியர் உறவுகள் மாநாட்டில் சாதனையாளருக்கு அமைச்சர் அன்பரசன் விருது

சென்னை, நவ.6–

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மனித வளம் மற்றும் தொழில்கள் அவசியம் என குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறினார்.

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்கொளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம் இன்ஸ்டிடியூட் ஆப் சயின்ஸ் அண்ட் டெக்னாலஜியில் தேசிய ஊழியர் உறவுகள் மாநாடு மற்றும் விருதுகள் வழங்கும் நிகழ்ச்சி டி.பி.கணேசன் அரங்கில் விழா நடைபெற்றது. இதில் வர்த்தக அமைப்புகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த தமிழக அமைச்சர் அன்பரசன், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அவற்றின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்றார்.

'பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கைகளை அரசாங்கங்கள் வெளியிடும் அதே வேளையில், கொள்கைகள் விரும்பிய முடிவுகளை அடைவதை உறுதி செய்வதில் வர்த்தக நிறுவனங்களின் பங்கு இன்றியமையாததாகிறது.'

தமிழகம் குறித்து பேசிய அவர், தமிழகம் மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது. பொருளாதார வளர்ச்சியில் முதலிடத்தை எட்டிய மாநிலங்களில் இதுவும் ஒன்று என்றார்.

செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்கள் தொழில்துறை மண்டலங்களாக மாறியுள்ளன. அங்கு சிறந்த நிறுவனங்கள் அமைந்துள்ளன, மேலும் 10 லட்சத்திற்கும் அதிகமானோர் வேலை செய்கிறார்கள். வரும் ஆண்டுகளில் மாநிலம் மேலும் பொருளாதார வளர்ச்சியை காணும்.




இவ்வாறு அமைச்சர் அன்பரசன் கூறினார்.

#### கலெக்டர் ராகுல் நாத்

செங்கல்பட்டு கலெக்டர் ராகுல் நாத் கூறுகையில், நிறுவன வளர்ச்சிக்கு வரும்போது ஊழியர் உறவுகள் இன்றியமையாத அங்கமாகும் என்றார். ஆரோக்கியமான பணியாளர் உறவுகளை வைத்திருப்பது அவசியம் என்றார்.

இதன் பதிவாளர் எஸ் பொன்னுசாமி, தொழில்துறைக்கும் கல்வித்துறைக்கும் இடையிலான உறவுகளை உயர்த்துவதற்கு உறுதியளித்தார். தொழில்துறை மற்றும் கற்றல் உலகிற்கு இடையே உள்ள பிணைப்பு, தொழில் எதிர்கொள்ளும் பல சவால்களை எதிர்கொள்ள உதவியாக இருக்கும் என்றார்.

தென்னிந்திய வர்த்தக சபை துணைத் தலைவர் வி.என்.ஷிவ் சங்கர், இந்த மாநாடுகள் போன்ற நிகழ்வுகள் கல்வி உலகிற்கும் தொழில்துறைக்கும் இடையிலான வலுவான உறவுகளுக்கு வழி வகுக்கும், இது பொருளாதார முன்னேற்றத்தை வலுப்படுத்தும் என்று கூறினார்.

விழாவின் போது பல்வேறு நிறுவனங்களின் பணியாளர்கள் தமிழக அமைச்சரிடம் இருந்து விருதுகளை பெற்றனர்.

#### கார்த்திக் சுப்பிரமணியம்

சிறந்த ஐ.ஆர் நிபுணத்துவ விருதை ஜெனரல் எலக்ட்ரிக் (ஜிஇ வெர்னோவா, கிரிட் சொல்யூஷன்ஸ்) கார்த்திக் சுப்பிரமணியும், வளரும் ஐ.ஆர் புரொபஷனல் விருதை டிஎம் ஆட்டோமோட்டிவ் சீட்டிங் சிஸ்டம்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் பெருமாள் கருணாகரனும் பெற்றனர்.

வாழ்நாள் சாதனையாளர் விருது டொமினிக் சாவியோவுக்கு கிடைத்தது. அசோக் லேலண்ட் (பவுண்டரி பிரிவு, ஸ்ரீபெரும்புதூர்) விருதை வென்றது.

தென்னிந்திய வர்த்தக சபை கமிட்டியின்தலைவர்ரத்னவேல்ராஜன் வரவேற்றார். தொழில் மையத்தின் இயக்குநர் டாக்டர் வெங்கட சாஸ்திரி, செங்கல்பட்டு எம்.எல்.ஏ வரலட்சுமி மதுசூதனன், மாநாட்டின் தலைவர் மற்றும் விப்ரோ இன்ஃப்ராஸ்ட்ரக்சர் இன்ஜினியரிங் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புராதன கலைப்பொருட்கள், ஓவியங்கள் ஆன்லைன் ஏலம், சில்லறை விற்பனை: தலைவர் விஜய் கிஷோர் துவக்கினார்

சென்னை, நவ 6–

பழம் பொருட்கள் புராதன அரிய வகை கலை நயம் மிக்க ஓவியங்கள் மற்றும் விற்பனையை மேம்படுத்தவும் வாடிக்கையாளர்களை ஊக்குவிக்கவும் சென்னையில் ஏலம் மற்றும் விற்பனைக்கான நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் இந்திய வம்சாவளியினரின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாக்கும் வகையில் முறையான பழம்பொருட்கள், புராதன அரிய கலைப்பொருட்கள் , ஓவியங்கள், ரூபாய் நோட்டுகள். நாணயங்கள், நினைவுச் சின்னங்கள், வரைபடங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

Bidfe.com நிறுவன தலைவர் விஜய் கிஷோர் ஒரு எம்.பி.ஏ பட்டதாரி ஆவார். சிறு வயது முதல் புராதன பொருட்களை சேகரிக்கும் பழக்கம் கொண்ட இவரின் வாழ்க்கை "கனவு மெய்ப்பட வேண்டும்" என்ற வாக்கியத்திற்கு ஏற்ப வணிகமாய் மாறிப்போனது.

செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது: ''கடந்த 2016ஆம் ஆண்டு முதல் பழம்பொருட்களை Bidfe.com மற்றும் Bidfe.in ஆகிய இணையதளங்கள் வாயிலாக ஏலம் மற்றும் சில்லறை விற்பனையிலும் ஈடுபட்டு வருகிறது.



பிட் பி டாட் காம் (Bidfe.com) நிறுவனமானது புரதான பொருட்களை சேகரிக்கும் ஆர்வலர்கள், மாணவர் சமூகம் மற்றும் குடும்பங்கள் தங்கள் பழைய பொருட்களை மிகவும் தொழில்முறை மற்றும் லாபகரமான முறையில் விற்க, மற்றவர்களிடம் இருந்து வாங்க ஒரு சந்தை தளமாக விளங்கி வருகிறது.

பிட் பி டாட் காம் (Bidfe.com) தங்கள் உள் நுழைவு ஐடி (ID) மற்றும் கடவுச்சொல்லை (pass word) உருவாக்கலாம். இந்த வணிகத்தில் ஈடுபடுபவருக்கு முதன்மை அல்லது இரண்டாம் நிலை வணிகமாக மாறக் கூடிய லாபத்தைப் அடையக்கூடிய நல்ல வாய்ப்பு கிடைக்கும்.

தென்னிந்தியாவின் மிகப்பெரிய ஏல நிறுவனமான பிட்பி (Bidfe) சென்னை தமிழ்நாட்டிலிருந்து தங்கள் நேரடி ஏலங்களைத் தொடங்கியுள்ளது. அடுத்து (2024) ஆண்டின் இறுதியில் 10 ஆயிரம் விற்பனையாளர்கள் இந்த வணிகத்தில் ஈடுபடுவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இது உலகின் பிற பகுதி மக்களைச் சென்றடையும் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# ஆலிம் முகம்மது ஆர்கிடெக்சர் கல்லூரியில் 75 மாணவ மாணவியர்களுக்கு பி.ஆர்க் பட்டங்கள்: தாளாளர் எஸ். சேகு ஜமாலுதீன் வழங்கினார்

### பல்கலைக்கழக ரேங்க் பெற்ற 4 மாணவர்களுக்கு தங்கப் பதக்கம்

சென்னை, நவ 6–

ஆலிம் முகம்மது சாலிஹ் அகாடமி ஆர்கிடெக்சர் கல்லூரி 2வது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் 75 மாணவர்களுக்கு பி.ஆர்க் 44 மாணவர்கள், 31 மாணவிகளுக்கு இளநிலை பட்டம் வழங்கப்பட்டது. பல்கலைக்கழக தரவரிசை தேர்ச்சி பெற்ற 4 மாணவர்களுக்கு ராகவ் கிருஷ்ணன் (14வது ரேங்க்) ஹரீஷ் டி.ஆர் (23வது ரேங்க்), ஷியாம். ஏ (28வது ரேங்க்) மற்றும் மீனாட்சி (30வது ரேங்க்) தலா தங்க நாணயம் மற்றும் பதக்கம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு தலைமை விருந்தினராக ஏஆர் விலாஸ் அவசட், தலைவர், இந்திய கட்டிடக் கலை நிறுவன தலைவர் பங்கேற்று மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்கள் வழங்கி "பட்டமளிப்பு நாள்" உரை நிகழ்த்தினார். கவுரவ விருந்தினராக பேராசிரியர் ஏஆர்ஜி ராஜா, தலைவர், ஐஐஏ, திருச்சி மையம் மற்றும் எஸ்.எஸ். ஹஷீபா, தலைவர், ஆலிம் முகம்மது சாலிஹ் கல்வி நிறுவனங்கள் குழு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கல்லூரியின் செயலாளரும் தாளாளருமான எஸ். சேகு ஜாமாலுதீன் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்து விழாவை துவக்கி வைத்தார். அண்ணா




பல்கலைக்கழக தரவரிசையில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிளுக்கு தலா ஒரு பதக்கம் மற்றும் தங்க நாணயம் வழங்கி சிறப்பித்தார்.

விழாவில் பேசிய தலைவர், இந்திய கட்டிடக் கலை நிறுவனம் செயலாளர் ஏஆர் விலாஸ் அவசட், "நமது நகரங்களை மட்டுமல்ல, நமது சமூகம் மற்றும் தேசத்தின் சாரத்தையும் வடிவமைப்பதில் கட்டிட கலைஞராக உங்கள் பங்கு முக்கியமானது. படைப்பாற்றல், பார்வை மற்றும் நிலையான வடிவமைப்பிற்கான அர்ப்பணிப்புடன் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். கட்டமைப்பு துறையில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும் சக்தி உங்களிடம் உள்ளது. மேலும் உங்கள் கட்டிட வடிவமைப்பு கலை முயற்சிகள் உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் புதுமைக்கு சான்றாக இருக்கட்டும் என்றார்."

சேகு ஜமாலுதீன் கூறுகையில், "கட்டிட வடிவமைப்பு கலை மூலம் நமது சமுதாயத்தையும் நாட்டையும் மாற்றியமைக்கும் திறன் உங்களிடம் நான் கண்டு கொண்டேன். இதற்கு உங்கள் வடிவமைப்புகள் மற்றும் புதுமைகள் நிலையான வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான திறவுகோலாக அமைந்துள்ளன. நீங்கள் ஒரு சிறந்த நாளைய கட்டிட வடிவமைப்பு கலைஞர்கள் என்பதை அறிந்து, உணர்வு மற்றும் நேர்மையுடன் பணிகளை ஏற்றுக் கொள்ளுமாறு நான் உங்களை கேட்டுக் கொள்கிறேன் என்றார்.''

இயக்குனரும் பேராசிரியருமான வி.அரவிந்த் மற்றும் பேராசிரியர் ஏ.ஜே. பால், துறைத் தலைவர் கட்டிட வடிவமைப்பு கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதில் நிறுவனம் ஆற்றிய முக்கிய பங்கை எடுத்துரைத்தனர்.



சென்னை, மேற்கு மாம்பலத்தில் செயல்பட்டு வரும் ஐஸ்வர்யா ஜாதகாலயத்தின் நிறுவனர் வேத சாஸ்திர ஜோதிடர் உ.வே. கே.எஸ்.ரவீந்திரன் திருக்கணித பஞ்சாங்கப்படி ஏற்பாடு செய்த ராகு–கேது பெயர்ச்சி மகா யாகம், தி.நகரில் உள்ள ஸ்ரீ பாலாஜி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. யாகத்தில் வேத விற்பன்னர்கள் 50 பேர் பங்கேற்றனர். அந்த ஒளிபரப்பை யூடியூப் சேனலில் இப்பொழுதும் கண்டு பயன்பெறலாம். பக்தர்களுக்கு அன்னதானமும், பிரசாதமும் வழங்கப்பட்டது.


**SARVAM MULTI-STATE COOPERATIVE HOUSING SOCIETY LTD**
**MSCS/CR/1409/2023**
**RAAHAT PLAZA # 172, 1st Floor, Arcot Road, Vadapalani, Chennai -600026, TN.**

**NOTICE**

The Election to elect new Board of Directors for the society was held on 01.11.2023 and the following Office Bearers were elected in that election.

| | |
|---|---|
| 1.Dr. A.GNANAGURU | CHIARMAN |
| 2.Mr.K.RAJAMOHAMMED | VICE CHAIRMAN |
| 3.Mrs. M.SHENBAGAVALLI | DIRECTOR |
| 4.Mrs.VALARMATHI | DIRECTOR |
| 5.Mr.R.SUGUMARAN | DIRECTOR |
| 6.Mr.D.KANNIYAPPAN | DIRECTOR |
| 7.Mr.P.KARUNANITHI | DIRECTOR |
| 8.Mr.R.MURUGESAN | DIRECTOR |
| 9.Mr.S.RAJAKUMAR | DIRECTOR |
| 10.Mr.P.SANTHANA PRABU | DIRECTOR |
| Mr.ALIMUTHU | DIRECTOR |

The above office bearers will manage the affairs of the society for 5 years from 02.11.2023 to 01.11.2028

Date: 02.11.2023 R.RAMESH M.A, H.D.C
Place: Chennai -26 Returning Officer



**அசல் சொத்து அவணம் காணவில்லை (பாகப்பிரிவினை பத்திரம்)**

சென்னை 600 012, குயப்பேட்டை, சச்சிதானந்தம் தெரு, கதவு எண்.11/27ல் முகவரியில் வசித்து வரும் S.**திலகவதி** (**ஆதார் எண்.**8569 2866 1132), க/பெ. லேட் V.சுப்பிரமணியம் சுமார் 67 வயதுடைய நான் இதன் மூலம். பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் பரசைவாக்கம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்ட எனக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல **ஆவண எண்.276/1988**, தேதி:12.02.1988 தொலைந்துவிட்டது. யாரேனும் அதனை காண்டுப்பிடித்தால் எனது **98401 76688** கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட எனது முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

S. **திலகவதி**
எண்.11/27, சச்சிதானந்தம் தெரு,
குயப்பேட்டை, சென்னை 12.



**அசல் ஜெனரல் பவர் ஆஃப் அட்டர்னி பத்திரம் காணவில்லை**

எனது கட்சிக்காரர், திரு.G.செந்தில்குமார், S/o.திரு.கோபாலகிருஷ்ணன், சார்பாக, இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில், செங்கல்பட்டு தாலுகா, செங்கல்பட்டு நத்தம் ஏ கிராமத்தில் அமைந்துள்ள சர்வே எண்.371/1ஏ மற்றும் 371/2ல் உள்ள மொத்த ஏக்கர் 12.94 சென்ட் நிலம் தொடர்பாக, திரு. குழந்தைவேல் மற்றும் திரு.ஜி.செந்தில்குமார் ஆகியோருக்கு ஆதரவாக M/s.ஜெயித்ரி ரியல் எஸ்டேட் நிறுவனத்தால் நிறைவேற்றப்பட்ட 10.11.2020 தேதியிட்ட ஜெனரல் பவர் ஆஃப் அட்டர்னி பத்திரம், SRO செங்கல்பட்டு கூட்டு II இன் கோப்பில், ஆவண எண்.8659/2020 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள அசல் ஆவணம், கடந்த 01.11.2023, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் தொலைந்து விட்டது, யாரேனும் அதனைக் கண்டுபிடித்தால் எனது கைபேசி எண் 9884936369/7358292381 அல்லது என்னுடைய அலுவலக முகவரி No.2, Room No.24, Kondi Chetty Street, Parrys, Chennai – 600001 தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எம்.முகம்மது ஹம்சா அமீரி
வழக்கறிஞர், சென்னை



**சிதம்பரம் உதவி ஆட்சியர் நீதிமன்றம்**

முருகபாண்டியன்,
த/பெ. இராமசாமி
நெ.59, மாரியம்மன் கோயில் தெரு,
கீழ்குண்டலபாடி கிராமம்,
பெராம்பட்டு (போஸ்ட்),
சிதம்பரம் வட்டம் ...மனுதாரர்
எதிர்
வட்டாட்சியர், சிதம்பரம் ...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மனுதாரராகிய எனக்கு எனது மனைவி புவனேஸ்வரி ஆகிய எங்களுக்கு கடந்த 28.05.2004 அன்று மேற்படி முகவரியில் ராஜராஜேஸ்வரி என்ற பெண் குழந்தை பிறந்தது. தற்போ பிறப்புச் சான்று தேவைப்படுவதால் மேற்படி நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் மேற்படி நீதிமன்றத்தில் 15 நாட்களுக்குள் நேரிலோ அல்லது எழுத்து மூலமோ தெரிவிக்க வேண்டியது. தவறினால் ஆட்சேபணை இல்லையென மனு ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**முருகபாண்டியன்**
மனுதாரர்



**BEFORE THE IV ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT) AT PONNERI**
**E.P.No. 161 of2019 in O.S. No. 252 of 2007**

Russel Raj
. . . Decree Holder/Plaintiff
-Vs-
Masthan Ibrahim
. .. Judgment debtor/Defendant

To
Masthan Ibrahim,
S/o.Mohammed Siddique
No.27, Sothupakkam Road,
Redhills, Chennai-600052
...Respondent/Judgement debtor

Whereas the Decree Holder/ plaintiff above named has filed the above E.P.No.161 of 2019 in O.S.No. 252 of 2007 to execute the decree in O.S.No.252 of 2007. On 09.10.2021, the Honourable IV Additional District & Sessions Judge, Ponneri has ordered notice to you returnable by 29 .11.2023.

You are therefore hereby given notice to appear in person or through pleader duly authorized before the Honourable IV Additional District & Sessions Judge, Ponneri, on 29 .11.2023 at 10.30 A.M when the above matter is being called failing which the matter will be heard and decided in your absence.

A.C.Susheel Kumar
Counsel for Decree Holder/ Plaintiff



**விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்**

(CIN - U65929TN2019PTC127644)

பதிவு அலுவலகம் : பிரஸ்டீஜ் ஐக்ரியா மெட்ரோபாலிடன், எண்.200/1-8, 1வது தளம், பிளாக்-1, அண்ணா சாலை, சென்னை 600002.

**செப்டம்பர் 30, 2023 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தணிக்கை செய்யப்படாத தனித்த நிதிநிலை முடிவுகள்**

[செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்), விதிகள் 2015ன் விதி 52(8) மற்றும் 52(4)]

(₹ லட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | செப்டெம்பர் 30, 2023ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | செப்டெம்பர் 30, 2022ல் முடிவடைந்த காலாண்டு (தணிக்கை செய்யப்படாதது) | மார்ச் 31, 2023ல் முடிவடைந்த ஆண்டு (தணிக்கை செய்யப்பட்டது) |
|---|---|---|---|---|
| 1. | செயல்பாடுகள் மூலம் மொத்த வருமானம் | 1,105.95 | 528.67 | 3,005.48 |
| 2. | காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (வரி, தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு முன்) | (140.86) | (57.87) | 31.98 |
| 3. | வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | (140.86) | (57.87) | 31.98 |
| 4. | வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம் / (நஷ்டம்) (தனிப்பட்ட மற்றும் / அல்லது அசாதாரண வகைகளுக்கு பின்) | (104.95) | (20.85) | 23.93 |
| 5. | காலத்திற்கான மொத்த விரிவான வருமானம் (காலத்திற்கான லாபம் / (நஷ்டம்) (வரிக்கு பின்) மற்றும் இதர விரிவான வருமானம் (வரிக்கு பின்) உள்ளடக்கியது) | (106.85) | (22.33) | 16.87 |
| 6. | செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் | 1,691.55 | 1,691.55 | 1,691.55 |
| 7. | நிலுவையில் உள்ள கட்டாயமாக மாற்றக்கூடிய முன்னுரிமை பங்குகள் | 992.95 | 992.95 | 992.95 |
| 8. | ரிசர்வ்கள் (மறுமதிப்பீடு ரிசர்வ்கள் நீங்கலாக) | (3,149.34) | (3,163.36) | (3,045.75) |
| 9. | பங்கு பிரீமியம் கணக்கு | 12,799.77 | 12,800.37 | 12,800.37 |
| 10. | நிகர மதிப்பு | 12,334.93 | 12,321.51 | 12,439.12 |
| 11. | செலுத்தப்பட்ட கடன் மூலதனம் / கடன் நிலுவை | 5,671.65 | 160.99 | 1,396.62 |
| 12. | நிலுவையிலுள்ள மீட்டெடுக்கக் கூடிய முன்னுரிமை பங்குகள் | NA | NA | NA |
| 13. | கடன் பங்கு விகிதம் | 0.45 | (0.00) | 0.11 |
| 14. | ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒன்று ரூ.10/-) (தொடரும் மற்றும் கைவிடப்பட்ட செயல்பாடுகள்)<br>1. அடிப்படை<br>2. டைலூட்டட் | (0.59)<br>(0.59) | (0.12)<br>(0.12) | 0.09<br>0.06 |
| 15. | மீட்கக்கூடிய மூலதன ஒதுக்கீடு | NA | NA | NA |
| 16. | மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு | NA | NA | NA |
| 17. | கடன் சேவை கவரேஜ் விகிதம் | 0.38 | 0.64 | 0.21 |
| 18. | வட்டி சேவை கவரேஜ் விகிதம் | 0.18 | (39.49) | 22.23 |

குறிப்பு :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள், 2015ம் வருடத்தைய செக்யூரிட்டிஸ் அண்டு எக்சேஞ்சு போர்டு ஆஃப் இந்தியா (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகளின், விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். காலாண்டுக்கான நிதிநிலை முடிவுகளின் முழு விவரம் பாம்பே ஸ்டாக் எக்ஸ்சேஞ்சின் இணையதளம் (BSE: www.bseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.vivritiamc.com) ஆகியவற்றில் கிடைக்கும்.
2. செபி (பட்டியல் கடமைகள் மற்றும் வெளிப்படுத்துதல் சம்பந்தமான நிபந்தனைகள்) விதிகள் 2015, விதி 52(4)ன் தொடர்புடைய தகவல்கள் ஸ்டாக் எக்சேஞ்(பிஎஸ்இ)க்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து (www.bseindia.com)ல் அணுகலாம்.

விவ்ரிடி அசெட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட்டுக்காக
ஒப்பம் / –
வினீத் சுகுமார்
நிர்வாக இயக்குனர்
DIN: 06848801

இடம் : சென்னை
தேதி : 02 நவம்பர் 2023